# ஜி.எம். கிள்ளாங் வழங்கும் மாதாந்திர சுற்றுப்பயண தொகுப்புகள்

கோலாலம்பூர், ஜூன். 3–

ஜி.எம். கிள்ளாங் தனது 12ஆவது ஆண்டு நிறைவுடன் இணைந்து “Road To Bonanza 12” எனும் பிரச்சாரத்தின் மூலம் ரிம.2,000 மதிப்புள்ள மாதாந்திர உள்ளூர் சுற்றுப்பயணங்களை வெல்ல பொதுமக்களுக்கு வாய்ப்பு தருகின்றது.தனது சந்தையில் உள்ள விசுவாசமான வாடிக்கையாளர்களைப் பாராட்டும் விதமாக இந்த பிரச்சாரம் இருப்பதாக ஜி.எம். கிள்ளாங் நிறுவனத்தின் தகவல் தொடர்பு மற்றும் மக்கள் தொடர்பு மேலாளர் நோர்சுஹைடா ஓத்மான் தெரிவித்தார்.




இந்த பிரச்சாரம் இன்று முதல் டிசம்பர் 31 வரை நடத்தப்படும் என்று அவர் கூறினார். இந்த பிரச்சாரத்தில் பங்கேற்க, வாடிக்கையாளர்கள் ஜி–கிளாங்கில் உள்ள எந்தவொரு கடையிலும் இ–வாலட் பயன்பாட்டைப் பயன்படுத்தி ரிம.100 மற்றும் அதற்கு மேல் செலவழிக்க வேண்டும்.

“அடுத்து, வாடிக்கையாளர்கள் ஜிஎம் கிள்ளாங் நிறுவனத்தால் வழங்கப்பட்ட QR குறியீட்டை ஸ்கேன் செய்ய வேண்டும். அத்துடன் இப்பிரச்சாரத்தைப் பற்றிய தகவல்களை வாடிக்கையாளர்கள் தங்கள் சமூக ஊடக தளங்களில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

“இதன் மூலம், ஒவ்வொரு மாதமும் இரண்டு அதிர்ஷ்ட சாலிகள் ஒரு சுற்றுப்பயணப் பொதியை வெல்வதற்கான வாய்ப்பைக் பெறுவார்கள்.

அதே நேரத்தில், மோட்டார் சைக்கிளை வெல்லும் ஒரு அதிர்ஷ்ட டிராவிற்கு ஒவ்வொரு மாதமும் 10 வாடிக்கையாளர்கள் அறிவிக்கப்படுவார்கள்” என்று அவர் நேற்று ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




மொத்த பூட்டுதல் காலத்தின் முதல் கட்டம் நடைமுறையில் இருந்தாலும், அத்தியாவசிய பொருட்களை வழங்கும் கடைகள் வழக்கம் போல் செயல்படுவதால் ஜி.எம். கிள்ளாங் இன்னும் ஓரளவு இயங்குவதால் வாடிக்கையாளர்கள் இப்பிரச்சாரத்தில் பங்கேற்பதில் எந்தவொரு தடையும் ஏற்படாது என்று அவர் கூறினார்.

அரசாங்கத்தின் அழைப்புக்கு ஏற்ப ஜி.எம். கிள்ளாங்கில் பணம் செலுத்துவதற்கான முக்கிய முறைகளில் ஒன்றாக இ–வாலட் பயன்பாடுகளைப் பயன்படுத்துவதையும் இந்த பிரச்சாரம் ஊக்குவிக்கிறது. குறிப்பாக இந்த கோவிட்–19 நோய்த்தொற்றின் போது, இப்பிரச்சாரம் வாடிக்கையாளர்களின் சுமையைக் குறைக்கும் என்று நம்புவதாக அவர் மேலும் கூறினார்.

இந்த பயண தொகுப்பு பரிசுகளை வழங்குவதன் மூலம் சிலாங்கூர் சுற்றுலா துறையால் இப்பிரச்சாரம் ஆதரிக்கப்படுகின்றது. இதனால் மாநிலத்தின் சுற்றுலாத் துறையை உயர்த்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

# வர்த்தகர்களின் சுமையைக் குறைக்க உதவும் பெமெர்காசா கூடுதல் ஊக்குவிப்புத் திட்டம்

கோலாலம்பூர், ஜூன். 3–

மூன்றாவது நடமாட்டக் கட்டுப்பாட்டு உத்தரவு காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ, அரசாங்கம் நேற்று, திங்கட்கிழமை நான்காயிரம் கோடி ரிங்கிட் மதிப்பிலான பெமெர்காசா கூடுதல் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவித் திட்டங்களை அறிவித்திருந்தது.

இதில் குறிப்பாக வர்த்தகர்களுக்கான உதவித் திட்டத்தில், 600 கோடி ரிங்கிட் ஒதுக்கீட்டை உட்படுத்தி பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டிருப்பது, அத்துறையைச் சேர்ந்தவர்களின் சுமையை ஓரளவு குறைக்க உதவும் என்று கோலாலம்பூர் – புத்ராஜெயா இந்திய வர்த்தக சம்மேளனத்தின் மத்திய செயலவை உறுப்பினர் டத்தோ சரவணன் சுப்பிரமணியம் நம்பிக்கைத் தெரிவித்திருக்கிறார்.



PEMERKASA
Program Strategik Memperkasa Rakyat dan Ekonomi

“அனைவரும் பாதிக்கப்பட்டிருந்தாலும், இந்த காலக்கட்டத்துல அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பது வர்த்தகம்தான். இதில், அதிகமாக சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், திங்களன்று அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டம் ஓரளவு அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன்” என்று அவர் கூறினார்.

கோவிட்–19 நோயைக் கட்டுப்படுத்த அமல்படுத்தப்படும் இந்த பி.கே.பி.–இனால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உதவ, அரசாங்கம் அறிவித்த உதவித் திட்டங்களில், வங்கிக் கடன் ஒத்திவைப்பு, பரிவுமிக்க சிறப்புநிதி, ஊதிய உதவித்தொகை, வங்கிகள் மூலம் 150 கோடி ரிங்கிட் மதிப்பிலான கடனுதவி மற்றும் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு வழங்கப்படும் மின்சார கட்டணக் கழிவு ஆகியவையும் அடங்கும்.

வர்த்தகத் துறையைச் சேர்ந்தவர்கள் அரசாங்கம் வழங்கியிருக்கும் இந்த சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சரவணன் வலியுறுத்தினார்.

“அதில், வங்கிக் கடன் ஒத்திவைப்பு தானியங்கி முறையில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதை வங்கிக்குச் சென்று விண்ணப்பிப்பது நல்லது. அதோடு, தற்போது வர்த்தகர்கள் தங்களின் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கியாக வேண்டும். இந்த ஊதியத்தை வழங்க அரசாங்கம் மூலமாக, ஒரு மாதத்திற்கு உதவித் தொகை வழங்கப்படும் என்பது மகிழ்ச்சியான செய்தி,” என்று அவர் குறிப்பிட்டார்.

இதைத் தவிர, இதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட 10, 000 ஆயிரம் கோடி ரிங்கிட் ஒதுக்கீடு இன்னும் நிர்வகிப்பில் இருப்பதாக பிரதமர் அறிவித்ததை சுட்டிக் காட்டிய அவர், வர்த்தகர்கள் தங்களுக்கு வழங்கப்படும் இந்த சிறப்பு உதவிகளுக்கு விரைவில் விண்ணப்பித்து, அதன்வழி நன்மை பெறுமாறும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, கோவிட்–19 நோயை எதிர்கொள்ள மிகப்பெரிய சவாலை எதிர்நோக்கி வரும் இக்காலகட்டத்தில் அரசாங்கம் வழங்கியிருக்கும் இந்த உதவிகள் வரவேற்கத்தக்கது என்றாலும் சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு அதில் சில கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்ட வேண்டும் என்று சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை செயற்குழு உறுப்பினர் அன்பானந்தன் கருப்பையா கேட்டுக் கொண்டிருக்கிறார்.

“இந்த பி.கே.பி. 3.0–இல் சிறு மற்றும் நடுத்தர வியாபாரத் துறையில் இருப்பவர்களுக்கு சில பிரச்சனைகள் இருப்பதாக தெரிகிறது. உதாரணத்திற்கு, இந்த பி.கே.பி. இரண்டு வாரத்தோடு நிறைவடையும் என்று கூற முடியாது. நாங்கள் கேட்டுக் கொள்வது, டி.ஆர்.எஃப்.எஃப். சற்று கடுமையாக இருப்பதால், அதைப் பயன்படுத்துவதென்றால், அரசாங்கம் அதன் உதவித்தொகை அளவு சற்று பார்க்க வேண்டும்” என்று அவர் கூறினார்.

அதோடு, MOROTARIUM எனப்படும் வங்கிக் கடன் ஒத்திவைப்பு ஆறு மாதத்திற்கு நீட்டிக்கப்படுவது இன்னும் பேருதவியாக இருக்கும் என்று அன்பானந்தன் நம்பிக்கைத் தெரிவித்தார்.

# மதுபான தொழிற்சாலைகளை மூடுவதற்கு உத்தரவு

கோலாம்பூர், ஜூன். 3–

முழு அடைப்பின்போது தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட பீர் தயாரிப்பு நிறுவனங்கள் தற்போது தங்களது உற்பத்தியை மூட வேண்டும்.




அத்தியாவசிய தொழில்துறையாக அவை இல்லையென்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பாதுகாப்புக்கான முதன்மை அமைச்சர் இஸ்மாயில் சப்ரி யாக்கோப் தெரிவித்தார். முழு அடைப்பின்போது உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் செயல்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டன. அத்தியாவசிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. பீர்கள் அத்தியாவசிய பொருட்கள் பிரிவில் இடம்பெறவில்லையென இஸ்மாயில் சப்ரி தெரிவித்தார். நாடுமுழுவதிலும் உள்ள அனைத்து பீர் தயாரிப்பு நிறுவனங்களும் உடனடியாக மூடப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன் முழு அடைப்பின்போது கார்ஸ்பெர்க் பீர் நிறுவனம் செயல்படுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது ஏன் என அமனா கட்சியின் இளைஞர் பிரின் தலைவர் முநளைமே ஞாயறமே ழுடிஅநள கேள்வி எழுப்பியிருந்தார். கடுமையான எஸ்.ஓ.பியுடன் அந்த நிறுவனத்திற்கு அனைத்துலக வாணிக தொழில்துறை அமைச்சு வழங்கிய அனுமதி கடிதம் சமுக வலைத்தளங்களில் வைரலானதை தொடர்ந்து கெவின் சான் கோமஸ் இந்த கேள்வியை எழுப்பியிருந்தார்.

# கோவிட்–19; வாடிக்கையாளர்களுக்கும் வணிகங்களுக்கும் எச்.எஸ்.பி.சி உதவி

கோலாலம்பூர், ஜூன். 3–

மலேசியா எச்.எஸ்.பி.சி வங்கி மற்றும் மலேசியா எச்.எஸ்.பி.சி அமானா ஆகியவை இணைந்து கோவிட்–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கான (எஸ்.எம்.இ) நடைமுறையில் உள்ள நிதி உதவி திட்டங்களை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

எச்எஸ்பிசி மலேசியாவின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டுவர்ட் மில்னே கூறுகையில், தனிநபர் சில்லறை வாடிக்கையாளர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினர்கள் பி40 என வகைப்படுத்தப்பட்டு Bantuan Sara Hidup (BSH) அல்லது Bantuan Prihatin Rakyat (BPR) மற்றும் சமீபத்தில் கோவிட்–19 நோய்த்தொற்றின் தாக்கத்தால் வேலை இழப்பு அடைந்தவர்கள் எச்எஸ்பிசி வழங்கும் உதவிகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். முழு நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் போது செயல்பட முடியாததால் நேரடியாக பாதிக்கப்படும் சிறு நிறுவனங்களுக்கும் எச்எஸ்பிசி உதவ முன்வந்துள்ளது.

தகுதி வாய்ந்த வாடிக்கையாளர்கள் இத்திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம் மற்றும் மூன்று மாத கடன் ஒத்திவைப்பு அல்லது ஆறு மாதங்களுக்கு செலுத்தப்படும் கடன் உதவிக்கு 50 சதவீதம் குறைப்பையும் வாடிக்கையாளர்கள் தேர்வு செய்யலாம்.

“குறைக்கப்பட்ட வருமானம் கொண்ட அனைத்து சில்லறை வாடிக்கையாளர்களும் ஆறு மாத கடன் உதவிக்கான மாதாந்திர தவணைகளை குறைக்க விண்ணப்பிக்கலாம் எச்எஸ்பிசி வாய்ப்பளிக்கின்றது” என்று அவர் கூறினார்.

“இத்திட்டங்கள் குறித்து எச்எஸ்பிசி வங்கி மலேசியா நெகாரா மலேசியாவுடன் தொடர்ந்து ஆலோசித்து வருகிறது. ஏனெனில் வாடிக்கையாளர்களுக்கும் வணிகங்களுக்கும் அவர்களின் நிதி சுமையக் குறைக்க இது உதவியாக இருக்கும். இந்த முக்கியமான நாட்களில் சிறு வணிகர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நாங்கள் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்” என்று அவர் மேலும் கூறினார்.

# சர்க்கரை உற்பத்தியை நாளை மீண்டும் தொடங்க எம்.எஸ்.எம் திட்டம்

கோலாலம்பூர், ஜூன். 3–

எம்.எஸ்.எம் மலேசியா நிறுவனத்தின் முழு உரிமையாளரான எம்.எஸ்.எம் சர்க்கரை சுத்திகரிப்பு நிலையம் அதன் மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக அதன் கொதிகலன் திருத்தம் பணிகளை முடித்தது மற்றும் ஜூன் 4, 2021 அன்று சர்க்கரை உற்பத்தியை மீண்டும் தொடங்கும் என்று நேற்று ஓர் அறிக்கையில் அறிவித்துள்ளது.

எம்.எஸ்.எம் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சைட் ஃபைசல் சைட் முகமட் கூறுகையில், “மார்ச் 31, 2021 முதல் பாசீர் கூடாங்கில் உள்ள தஞ்சோங் லாங்சாட் தொழில்துறை வளாகம் இரண்டு மாதங்கள் மூடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது நிறுவனத்தின் பாதுகாப்பிற்கு மட்டுமின்றி ஊழியர்களின் பாதுகாப்பிற்கும் முன்னுரிமை வழங்கி இம்முடிவு எடுக்கப்பட்டது” என்றார் அவர்.

“இந்த காலகட்டத்தில், ஜொகூர் எம்எஸ்எம் மற்றும் பெராய் எம்எஸ்எம் நிறுவனத்தில் போதுமான அளவில் உள்ள மீதமுள்ள பங்குகளைப் பயன்படுத்தியதன் மூலம் எங்கள் உள்நாட்டு விற்பனை உறுதிப்பாட்டை நிறைவேற்ற முடிந்தது.

“இந்த காலகட்டத்தில் ஏற்றுமதி பிரிவில் எங்களுக்கு சிறிதளவு இடையூறு ஏற்பட்டாலும், தற்போதுள்ள ஒப்பந்த மதிப்புகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை” என்று அவர் கூறினார். அதுமட்டுமின்றி, நிறுவனத்தின் வழக்கமான வாடிக்கையாளர்களுக்கு தயாரிப்புகள் வழக்கமான நிலையில் விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். சைட் ஃபைசல் மேலும் கூறுகையில், “தற்காலிகமான மூடல் என்பது நிறுவனத்தின் பாதுகாப்பு உறுதி செய்வத இலக்காகக் கொண்டது என்றார்.

“ஜொகூர் எம்எஸ்எமின் உற்பத்தி திறன் ஆண்டுக்கு ஒரு மில்லியன் டன்களாக உள்ளது மற்றும் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பதிவு செய்து வருகிறது” என்று அவர் கூறினார்.

இந்த மூடலின் விளைவாக குழுவின் லாபத்தில் எந்த நிதி தாக்கமும் ஏற்படவில்லை என்று சைட் ஃபைசல் குறிப்பிட்டார்.

இந்நிறுவனத்தின் வருமானம் 89 சதவீதத்திலிருந்து 92 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன், 2021 முதல் காலாண்டில் 16 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக கடந்த ஆண்டு இதே காலப்பகுதியை விட அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார். படிப்படியாக, இந்த ஆண்டு மூன்றாம் காலாண்டில் ஜொகூர் எம்எஸ்எமின் வருமானம் அதன் இலக்கு குறைந்தபட்சம் 50 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சைட் ஃபைசல் கூறினார்.

எஸ்.எஸ்.எம் நிறுவனம் தனது வணிகத்தை மேலும் விரிவுப்படுத்த பல திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு பல அரசு நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்றி வருகின்றது.

# ஜூன் 14 வரை வணிக நடவடிக்கைகளை மூடுகிறது ஹோண்டா

கோலாலம்பூர், ஜூன். 3–

அரசாங்கத்தின் மொத்த பூட்டுதல் அறிவிப்பை அமல்படுத்தியதைத் தொடர்ந்து ஹோண்டா மலேசியா தனது வணிக நடவடிக்கைகளை ஜூன் 1 முதல் 14 வரை தற்காலிகமாக மூடுகிறது.

இந்த தற்காலிகமான மூடல் நடவடிக்கையில் மலாக்காவில் உள்ள ஹோண்டா மலேசியாவின் நிலையமும் நாடு முழுவதிலும் உள்ள விற்பனை அலுவலங்களும் அடங்கும்.

ஹோண்டா நிறுவனம் தனது நாடு முழுவதும் உள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஆன்லைன் மூலம் சிறந்த சேவையை வழங்கும் என்று நேற்று ஓர் அறிக்கையில் அறிவித்துள்ளது.

“ஹோண்டா மலேசியாவின் அனைத்து வாடிக்கையாளர்களும் விற்பனைக்கு பிந்தைய சேவையை பெற ஹோண்டா நிறுவனத்தின் டச் பயன்பாட்டை பதிவிறக்கம் செய்ய ஊக்குவிக்கிறது. இது நீண்ட நேரம் காத்திருக்கும் பிரச்சினையிலிருந்து விடுபட வாடிக்கையாளர்களுக்கு ஹோண்டா நிறுவனம் உதவுகின்றது” என்று அது அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

இதற்கிடையில், ஹோண்டா மலேசியா ஜூன் 15 அன்று தனது வணிக நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும்.

# வங்கிகளின் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் தடையிடாது

பெட்டாலிங் ஜெயா, ஜூன். 3–

வங்கிகள் என்ன மாதிரியான தடை விதிக்க முடியும் அல்லது அவை எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து கட்டளையிட அரசாங்கத்திற்கு எந்தவொரு சட்ட அதிகாரமும் இல்லை என்று நிதியமைச்சர் தெங்கு ஜஃப்ருல் அஜீஸ் இன்று தெரிவித்தார்.

நேற்று ஒரு செய்தியாளர் கூட்டத்தில், டெங்கு ஜஃப்ருல், பேங்க் நெகாரா மற்றும் வங்கிகளுக்கு இடையிலான கலந்துரையாடலின் விளைவாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. முதல் MCO இல் செய்யப்பட்டதைப் போல, அனைவருக்கும் ஏன் தானியங்கி அடிப்படையில் தடை வழங்கப்படவில்லை என்று அவரிடம் கேட்கப்பட்டது.

அண்மையில் அறிவிக்கப்பட்ட விருப்பத் தடை பி40 குழு, வேலை இழந்தவர்கள் மற்றும் சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் வங்கிகளைக் கட்டுப்படுத்தாது. இது வங்கிகளின் நிலைப்பாடு, மற்றும் பி.என்.எம் இந்த முயற்சியை ஒருங்கிணைத்துள்ளது என்று தெங்கு ஜாஃப்ருல் அனைவருக்கும் ஒரு தடை விதிக்கக் கூடாது என்ற முடிவைப் பற்றி கேட்டபோது, தடையை அமல்படுத்துவதில் சிக்கல்கள் இருந்தால் அரசாங்கம் உதவும் என்றும் கூறினார்.

சமீபத்திய சுற்று தடைக்காலத்தின் கீழ், பாதிக்கப்பட்ட அனைவருமே பி40இல் உள்ளவர்கள், வேலை இழந்தவர்கள் மற்றும் தகுதியான சிறு, நடுத்தர நிறுவனங்கள் விண்ணப்பிக்கும்போது தானியங்கி ஒப்புதல்களைப் பெறுவார்கள் என்று தெங்கு ஜஃப்ருல் கூறினார்.

## தங்க விலை நேற்றைய நிலவரம்

பவுன் (916) = 1 கிராம் = ரிம. 250.00

தகவல்
தேவன் ஜுவல்லர்ஸ்
பினாங்கு, பட்டர்வொர்த், கூலிம் & நிபோங் திபால்

## அந்நிய நாணய நிலவரம்

| நாணய விவரம் | விற்கும் விலை | வாங்கும் விலை |
|---|---|---|
| 1 அமெரிக்க டாலர் | 4.1630 | 4.1189 |
| 1 ஆஸ்திரேலிய டாலர் | 3.2250 | 3.1809 |
| 1 சிங்கப்பூர் டாலர் | 3.1550 | 3.1209 |
| ஸ்ரீ லங்கா ரூபா (100) | 2.1885 | 1.2097 |
| 1 பவுன் லண்டன் | 5.8400 | 5.8300 |
| இந்திய ரூபாய் (100) | 5.9800 | 5.7809 |

## சுறுசுறுப்பாக இயங்கிய ஐந்து பங்குகள்

| பங்கு | விற்கும் விலை | வாங்கும் விலை |
|---|---|---|
| F&N | 27.04 | 27.00 |
| PANAMY | 33.00 | 32.80 |
| DLADY | 34.50 | 34.20 |
| HLIND | 10.28 | 10.24 |
| HSI-CIG | 1.66 | 1.65 |
| AIRPORT | 5.89 | 5.87 |